**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு), திருவில்லிபுத்தூர்.**
**முன்னிலை :– திரு. T.V.மணி, B.A., LL.B.,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

2025 ம் ஆண்டு ஜூலை திங்கள் 10 ஆம் நாள் வியாழக்கிழமை

IA.No.2/2023 in IP.No.2/2021

1) லட்சுமிநாராயணி
2) இராஜகோபால் ... மனுதாரர்கள்/2, 5 எதிர்மனுதாரர்கள்

–எதிர்–

1) பார்த்தசாரதி
2) வெங்கடேஷ்வரன்
3) சுமதி
4) லிங்குசாமி
5) மாரிமுத்து ... எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள்

இம்மனுவானது என் முன்பாக 23.06.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ராஜ்குமார், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.அ.சுவாதீஸ்வரன், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், மனுஉரை, எதிர்உரை, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பும் கேட்கப்பட்டும், இன்று இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

அசல் மனுவில் கடந்த 14.06.2023 அன்று மனுதாரர்கள்/2, 5 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்சஉத்தரவினை ரத்து செய்து உத்தரவிடக் கோரி கட்டளை 9, விதி 7 மற்றும் பிரிவு 151 உரிமையியல் விசாரணை சட்டப்பிரிவின் கீழ் மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்**

மனுவில், எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள் மோசடியாக கூட்டு சேர்ந்து கொண்டு மனுதாரர்களையும், அவர்களது குழந்தைகளையும் அசல் மனுவில் 1ம் எதிர்மனுதாரரது

கணவரையும் நொடித்தவர் என விளம்புகை செய்யக்கோரி நொடிப்புநிலை மனு தாக்கல் செய்துள்ளனர். எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்களை, மனுதாரர்களுக்கு யாரென்றே தெரியாது. மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களிடம் ஒரு போதும் கடன் வாங்கவில்லை. அசல் மனு குறித்து நீதிமன்றத்திலிருந்து எந்தவொரு அறிவிப்பும் மனுதாரர்களுக்கு சார்பு செய்யப்படவில்லை. இந்நிலையில் சில தினங்களுக்கு முன்பு மனுதாரர்களது உறவினர் ஒருவர் தினசரி நாளிதழில் அசல் மனு குறித்து விளம்பரம் வெளியாகி இருப்பதாக கூறி அதன் நகலினை மனுதாரர்களிடம் காண்பித்துள்ளார். மனுதாரர்கள் உடனடியாக அவர்களது வழக்கறிஞரை அணுகிய போது தான் மனுதாரர்களுக்கு எதிராக கடந்த 14.06.2023 அன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விபரம் தெரிய வந்துள்ளார். ஷைசொன்ன நாளிதழில் வெளியாகியுள்ள மனுதாரர்களது முகவரியும் அவர்களது தந்தையின் முகவரியும் தவறாக உள்ளது. மனுதாரர்களது முகவரி 4/46–C, தென்திருப்பதி நகர், செங்கமலநாச்சியார்புரம், திருத்தங்கல் அஞ்சல் ஆகும். ஆனால் மனுவில் மனுதாரர்களது முகவரியாக எதிர்மனுதாரர்கள், 4/110 லட்சுமி பவனம், திருப்பதி நகர் என்று வேண்டுமென்றே தவறுதலாக குறிப்பிட்டுள்ளார்கள். அதுபோல் மனுதாரர்களின் தந்தையான 2ம் மனுதாரர்/5ம் எதிர்மனுதாரரின் முகவரியான 2/800–H, சண்முகா நகர், செங்கமலநாச்சியார்புரம் கிராமம், திருத்தங்கல் அஞ்சல் என்பதற்கு பதிலாக வேண்டுமென்றே நொடிப்பு நிலை மனுவின் 1ம் எதிர்மனுதாரரான ரமேஷ் மாமனாரும், 2ம் எதிர்மனுதாரரின் தகப்பனாருமான செங்கமலநாச்சியார்புரம் கிராமத்தில் குடியிருக்கும் இராஜகோபால் என குறிப்பிட்டுள்ளார்கள். இவ்வாறாக நீதிமன்ற அறிவிப்புகள் மனுதாரர்களுக்கு சார்பு ஆகக்கூடாது என்ற ஒரே கெட்ட நோக்கத்தில் மனுதாரர்களது சரியான விலாசத்தை தெரிந்திருந்தும் மோசடியாக தவறுதலான முகவரியை குறிப்பிட்டு தினசரி நாளிதழில் தவறான முகவரிகளை குறிப்பிட்டே அறிவிப்பு எதிர்மனுதாரர்கள் பிரசுரம் செய்துள்ளார்கள். அதனால் மனுதாரர்களால் 14.06.2023ஆம் தேதிய வாய்தாவில் ஆஜராக இயலாமல் போய்விட்டது. மேலும் தாவா நொடிப்பு மனுவில் 3ம் எதிர்மனுதாரராக தாவா மனுவின் மனுதாரர்களது மூத்த மகளை குறிப்பிட்டுள்ளார்கள். அவர் 18 வயது பூர்த்தியடைந்த விபரம் எதிர்மனுதாரர்களுக்கு நன்கு தெரிந்திருந்தும்

வேண்டுமென்றே தாவா அசல் மனுவில் இளவராக குறிப்பிட்டுள்ளார்கள். அசல் மனுவினை எதிர்மனுதாரர்கள் சீர்திருத்தம் செய்து 1ம் மனுதாரரது மூத்த மகளை மேஜர் என காண்பிக்கும்பட்சத்தில் தான் 1ம் மனுதாரரின் மகளான 3ம் எதிர்மனுதாரர் தாவா அசல்மனுவில் ஆஜராகி கட்சி செய்ய இயலும். அசல் மனுவின் நகல் எதுவும் மனுதாரர்களுக்கு கிடைக்கப்பெறவில்லை, ஆகையால் தான் எதிருரை தாக்கல் செய்ய இயலவில்லை. எதிர்மனுதாரர்களின் மோசடி செய்கையினால் மனுதாரர்களால் ஆஜராக இயலாமல் போய்விட்டது. எனவே அசல் மனுவில் கடந்த 14.06.2023 அன்று மனுதாரர்கள்/2, 5 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்சஉத்தரவினை ரத்து செய்து உத்தரவிடக் கோரி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) எதிர்உரையின் சுருக்கம்**

2ம் எதிர்மனுதாரர், அசல் மனுவை தாக்கல் செய்த சமயத்தில் 1ம் மனுதாரரின் கணவரான அசல் மனுவில் கண்ட 1ம் எதிர்மனுதாரர் மீது 2ம் எதிர்மனுதாரரை ஏமாற்றி பண மோசடி செய்ததாக திருத்தங்கல் காவல் நிலையத்தில் 2ம் எதிர்மனுதாரரும், 1ம் மனுதாரரின் கணவரால் பாதிக்கப்பட்டவர்களும் புகார் மனு அளித்த சமயத்தில் அதன் மீதான விசாரணை சமயத்தில் மனுதாரர்கள், 2ம் எதிர்மனுதாரர் அசல் மனுவில் கூறியுள்ள முகவரியில் குடியிருந்து வந்த காரணத்தினால் தான் அசல் மனுவில் முகவரியை குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளார். அது போல் அசல் மனுவினை தாக்கல் செய்த போது 3ம் எதிர்மனுதாரர் இளவராக இருந்தமையால் மைனராக குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளார். தகுந்த சாட்சிய, சான்றாவணங்களுடன் அசல் மனுவில் மனு தாக்கல் 3ம் எதிர்மனுதாரரை மேஜராக நிரூபித்தால் அவரை மேஜராக சீர்திருத்தம் செய்ய தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளார். மனுதாரர்கள் அசல் மனுவின் நடவடிக்கைகளில் வேண்டுமென்றே ஆஜராகாமல் இருந்துவிட்டு ஒருதலைபட்ச உத்தரவிற்கு விட்டுவிட்டு தாவா மனுவில் பொய்யான காரணங்களை குறிப்பிட்டுள்ளார்கள். எனவே எதிர்மனுதாரர்கள் பக்க செலவுத் தொகையுடன் மனுதாரர்களது மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) இந்த மனுவில் தற்போது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனுதாரர்கள் கோரிய பரிகாரத்தை அவருக்கு வழங்க வேண்டுமா? என்பதேயாகும்.

5) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

6) <u>பிரச்சனைக்குரிய தீர்வு</u>

(6–i) மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள் மீது 1ம் எதிர்மனுதாரர் நொடித்தவர் என விளம்புகை செய்யக்கேட்டும், மனு 'பி' தபசில் சொத்துக்களைப் பொறுத்து 1, 2 எதிர்மனுதாரர்கள் கடந்த 17.02.2021 ஆம் தேதிய பத்திர எண்.892/2021ன் படி 3, 4 எதிர்மனுதாரர்கள் பெயரில் பதிவு செய்துள்ள தானசெட்டில்மென்ட் பத்தரம் சட்டப்படி செல்லாது என்று விளம்புகை செய்யக்கேட்டும் அதன் தொடர்ச்சியாக 3, 4 எதிர்மனுதாரர்கள் பெயரில் 1ம் எதிர்மனுதாரர் எழுதி வைத்த சொத்தினை நீதிமன்ற சொத்துக்காப்பாளர் வசம் சுவாதீனம் ஒப்படைத்து அதன் பெயரில் 'பி' தபசில் சொத்துக்களை ஏலம் விட்டு அதன்மூலம் கிடைக்கும் தொகையிலிருந்து மனுதாரர்களுக்கு சேர வேண்டிய கடன் தொகையினை பங்கு விகிதாச்சார படி பிரித்தளிக்கக் கேட்டும் மற்றும் மனு செலவுத் தொகையினை எதிர்மனுதாரர்கள், மனுதாரர்களுக்கு செலுத்த கேட்டும் அசல்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(6–ii) அசல் மனுஉரை மற்றும் அதன் மீது நடைபெற்ற நீதிமன்ற நடவடிக்கைகளையும், 1 முதல் 5 எதிர்மனுதாரர்களாக அசல் மனுவில் காண்பிக்கப்பட்டும், அதில் 3, 4 எதிர்மனுதாரர்கள் மைனர்களாக காண்பிக்கப்பட்டும். கடந்த 24.09.2021 முதல் 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டி தொடர்ந்து படி கட்டியும், நோட்டீஸ் அனுப்பியும் 22.12.2022 ஆம் தேதி வரையிலும் நோட்டீஸ்கள் சார்வாகாமலும் இருந்து, பின்பு அசல் மனுவில் 14.06.2023 ஆம் தேதியில் ஆஜராக வேண்டி பேப்பர் விளம்பரம் செய்யப்பட்டும் அன்றைய தேதியில் ஆஜராகாமல் ஒருதரப்பாக்கப்பட்டும் பின்பு முதன்மை மாவட்ட நீதிமன்றத்திலிருந்து இந்நீதிமன்றத்திற்கு மாறுதலாகி இந்நீதிமன்றத்தால்

27.06.2023 ஆம் தேதியில் கோப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு 14.07.2023 ஆம் தேதியில் இம்மனுவில் உள்ள எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்களை விசாரித்துக்கொள்ள வேண்டி வாய்தா இருந்தும் பின்பு 25.08.2023 ஆம் தேதியில் ஒத்திவைக்கப்பட்டும் இருந்த நிலையில் இம்மனுதாரர்களால் இம்மனுவும் தாக்கல் செய்யப்பட்டதாக உள்ளது.

(6–iii) மேலும் வழக்கு கோப்புகளை பார்வையிடும் பொழுது அசல் மனுவை தாக்கல் செய்த காலத்தில் இ.ம.எண்.1/2021 யை வகுமுறை 32, விதி 3 மற்றும் பிரிவு 151 சி.பி.சி.யின் படி தாக்கல் செய்யப்பட்டு அதில் 3, 4 எதிர்மனுதாரர்கள் மைனர்கள் என்பதால் அவர்களுக்கு பாட்டனாரும், கார்டியனும் என்ற முறையில் 5ம் எதிர்மனுதாரரான ராஜகோபால் (தற்பொழுது இம்மனுவில் உள்ள 2ம் மனுதாரர்) மூலமாக என்று காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த மனுவினை பொறுத்தும், அதே அளவில், நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்து அம்மனுவிலும் ஒருதரப்பாக்கப்பட்டும், அந்த மனுவும், இந்த மனுவுடன் சேர்த்து விசாரணைக்கு வந்துள்ளது.

(6–iv) எனவே இ.ம.எண்.1/2021 யை பொறுத்தமட்டில் இந்த மனுவில் உள்ள 2ம் மனுதாரர்/ராஜகோபால் தனக்கு எதிராக பிறந்த ஒருதரப்பாக்கப்பட்ட உத்தரவினை ரத்து செய்து கொள்ள மனு எதுவும் தாக்கல் செய்து கொள்ளவில்லை என்பதால் மேற்படி மைனர்களுக்காக வேண்டி வழக்கறிஞர்/நீதிமன்ற காப்பாளர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

(6–v) தற்பொழுது இம்மனுவில் உள்ள மனுதாரர்கள் தரப்பில் மனுவில் சொல்லிய காரணமும், வழக்கு கோப்பினை பார்வையிடும் பொழுது ஏற்புடையதாக காணமுடிகின்றது. எனவே மனுதாரர்கள் சரியான முகவரிக்கு சரியான முறையில் நீதிமன்ற அறிவிப்புகள் சார்வாகவில்லை என்பதும், பத்திரிக்கை விளம்பரங்களில் அவர்களின் குடியிருப்பு விலாச முகவரி உள்ள மாவட்டத்திற்கு பிரசுரமாகவில்லை என்பதை காணும் பொழுது இம்மனுவை அனுமதிக்கக்கூடியதாக உள்ளது என்றும் இந்நீதிமன்றம் தீர்மானித்து பிரச்சனை எண்.1 க்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவில், இம்மனுவை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. செலவுத் தொகைக்கு உத்தரவு இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2025ம் ஆண்டு ஜூலை திங்கள் 10ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

T V MANI Digitally signed by T V MANI

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் – இல்லை

T V MANI Digitally signed by T V MANI

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**
IA.No.2/2023 in IP.No.2/2021
**உத்தரவு நாள் – 10.07.2025**